**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 19.06.2025**
**OS. No. 52/2016**
**வழக்கு சாட்சி PW3–கனகராஜ் , த/பெ. சந்திரசேகர்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1 முதல் 5 மற்றும் 7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1 முதல் 5 மற்றும் 7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

வழக்கு சொத்துக்கள் ஆவடத்தூர் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்துக்களின் சர்வே எண்.226/8 ஆகும். அதன் விஸ்தீரணம் 22 X 20 அடி ஆகும். அவ்வாறு நாங்கள் 22 X 20 அடி உள்ளதாக எங்கள் பிராதில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். ச.எண்.361/3 ல் 20 X 60 அடி பாதை உள்ளது. அவ்வாறு நாங்கள் ச.எண்.361/3 ல் 20 X 60 அடி பாதை உள்ளதாக பிராதில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். நான் யுவராஜ் என்பவரிடம் தாவா சொத்துக்களை 2004 ம் வருடம் கிரையம் பெற்றேன், தேதி, ஆவண எண் தெரியவில்லை. என் முன் விற்பனையாளரான யுவராஜ் அவர்களுக்கும் அந்த சொத்துக்கள் கிரையம் மூலமாகத்தான் கிடைக்கப்பட்டதாகும். அவர் ராமலிங்கம் அவர்களிடம் கிரையம் பெற்றார். ச.எண்.226/8 ல் கண்ட சொத்திற்கு தற்போதைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. பிரபாகரன், விஸ்வநாதன், பிரேமா, ஆகியோர்கள் பெரியல் தான் ச.எண்.226/8 ல் கண்ட சொத்திற்கு தற்போது பட்டா உள்ளது. ச.எண்.226/8 ல் கண்ட சொத்திற்கு பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் அதன் பட்டா எண் எனக்கு தெரியவில்லை. ச.எண்.226/8 என்பது நாகமாணிக்கம் அவர்களின் மனைவி சந்தான லட்சுமி, அவர்களுடைய பிள்ளைகள் கேசவன், அய்யப்பன், பழனிசாமி ஆகியோர் பெயரில் பட்டா கூட்டாக உள்ளது என்றால் சரியல்ல. ச.எண்.226/8 ல் கண்ட சொத்தின் பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட 1ம் வாதி மூலம் ச.எண்.226/8 ல் கண்ட சொத்தின் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம், அதன் அடிப்படையில் பட்டா யார் பெயரில் உள்ளது என்று தெரிந்துகொண்டேன். வா.சா.ஆ.3 பட்டா எண்.1699 என்பதில் ச.எண்.226/8B ஆனது 1ம் வாதி பெயரில் வீட்டு இடமாக உள்ளது என்றால் சரிதான். அந்த ஒரு பட்டாவை தவிர வேறு பட்டாக்கள் எதுவும் தாவா

சொத்து சம்மந்தமான நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ள ச.எண்.226/8 என்பது தற்போது ச.எண்.226/8A வாக உள்ளது என்றும், அதற்கான ஆவணங்கள் எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், அந்த ஆவணங்கள் எல்லாம் 7 முதல் 9 பிரதிவாதிகளிடம் உள்ளது என்றால் சரியல்ல. ச.எண்.226/8A என்பது யூனியன் டிச்சுக்கு கிழக்காக உள்ளது என்றால் சரிதான். அதற்கு அடுத்தாக அரசு புறம்போக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். ச.எண்.226/8A வை பொறுத்தோ, அரசு நிலத்தை பொறுத்தோ கிருஷ்ணசாமிக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட ச.எண்.226/8A மற்றும் அதன் கிழக்கிலுள்ள அரசு நிலம் ஆகியவை யாரேனும் அனுபவத்திலுள்ளது என்று காட்டக்கூடிய வருவாய் துறை ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். 6ம் பிரதிவாதியாக காட்டப்பட்டுள்ள ஜலகண்டபுரம் பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து அவர்கள் பராமரிப்பில் தான் ச.எண்.226/8A மற்றும் அதன் கிழக்கிலுள்ள அரசு நிலம் ஆகியவை உள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். ச.எண்.226/8A என்ற சொத்தானது 1 முதல் 5 பிரதிவாதிகளின் பட்டா நிலம் என்றும், அதில் பாதை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அந்த இடத்தில் பாதையாக வருவாய் துறையால் எதுவும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எங்கள் முந்தைய விற்பனையாளர் J.U. ராமலிங்கம் அவர்களுக்கு அந்த சொத்துக்கள் சம்மந்தமாக ஆவணங்கள் எழுதிவைக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. ச.எண்.226/8A ல் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளது என்றும், அதை தடுக்க எங்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. ச.எண்.226/8A என்ற சொத்தை பிரதிவாதிகள் அவர்களுக்குள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றும், அந்த சொத்து நாகமாணிக்கத்திற்கு அவரது தந்தை வழியில் வரப்பெற்றது என்றும், நாகமாணிக்கம் இறந்தபிறகு வாரிசுகள் அடிப்படையில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு கிடைக்கப்பெற்றது என்றும், அதை அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனவே அந்த சொத்தை பொறுத்து எங்களுக்கு பாதை உரிமை கேட்க எவ்வித அதிகாரமும் இல்லை என்றும், அதனால் ச.எண்.226/8A பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. ராமலிங்கம் அவருக்கு பாத்திப்படாத சொத்தை பொறுத்து ஆவணங்கள் எழுதி வைத்துள்ளார் என்றும்,

அதனால் அந்த ஆவணம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், அந்த ஆவணத்தின் அடிப்படையில் நாங்கள் பாதை உரிமை எதுவும் கோர இயலாது என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.